**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்**
**E.A.75/2017**
**E.P.91/1997**
**அசல் வழக்கு எண்.193/1996**

2018 **ஆண்டு அக்டோபர்** மாதம் 12 ம் **நாள்**
சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி **திருமதி.எஸ்.மோகனரம்யா பி.ஏ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி** அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஆர். ரமேஷ் | வயது | 34 |
| த.பெ. | பி. ராஜன் | மதம் | |
| முகவரி | | தொழில் | கிராம நிர்வாக அலுவலர் வீரபாண்டி கிராமம் |

**<u>முதல் விசாரணை</u>**

**<u>நான் இந்த வழக்கில் மனுதரார் தரப்பு 22ம் சாட்சி (PW22)(12.10.2018)</u>**

இம்மனுவில் சாட்சியம் அளிப்பதற்கு எனக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. அழைப்பாணையீல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை எடுத்து வந்துள்ளேன். அழைப்பாணையில் பட்டா எண்.766 சம்மந்தப்பட்ட வருவாய் ஆவணங்களை எடுத்து வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது, ஆனால் அழைப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்திற்கு பட்டா எண்.776 வழங்கப்பட்டுள்ளது, பட்டா எண்.776 சம்மந்தப்பட்ட அழைப்பாணையில் கண்ட ஆவணங்களை எடுத்து வந்துள்ளேன். பட்டா எண்.776 க.ச.எண்.481/3க்கு வழங்கப்பட்டது. பட்டா எண்.776 க.ச.எண்.481/3 க்கான சான்றிட்ட RSR பதிவேட்டின் சான்றிட்ட நகல் சாட்சி சான்றாவணம் X1. பட்டா எண்.776 க்கான சான்றிட்ட சிட்டா நகல் சாட்சி சான்றாவணம் X2. புல எண்.481க்கான சான்றிட்ட புல வரைபட நகல் சாட்சி சான்றவாணம் X3. க.ச.எண்.481/3 பசலி 1427 க்கான சான்றிட்ட அடங்கல் கணக்கு சாட்சி சான்றவாணம் X4. பட்டா எண்.776 க.ச.எண்.481/3 ல் தற்போது ஜன சக்தி நகர் என்ற பெயரில் குடியிருப்புகள் உள்ள என்றால் சரிதான். க.ச.எண்.481/3ல் அரசு சார்பில் தார் ரோடு, தண்ணீர் தொட்டி அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி குடியிருப்பு வாசிகள்

எத்தனை ஆண்டு காலமாக க.ச.எண்.481/3 னை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் நான் விசாரணை செய்த வகையில் 20 ஆண்டு காலமாக அனுபவம் செய்து வருவதாகவும், மனு சொத்து சம்மந்தமாக வழக்கு நடைபெற்று வருவதாகவும், அரசு சார்பில் பட்டா வழங்கப்பட்ட விபரத்தினையும் தெரிந்து கொண்டேன்.

**<u>எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சாட்சி சான்றாவணம் X2 பட்டா எண்.776 ஆரம்ப காலக்கட்டத்தில் முனியன் பெயரில் வழங்கப்பட்டு பின்னிட்டு முருகேசன் பெயரில் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆவணங்களில் அவ்வாறு உள்ளது. பட்டா எண்.776 சம்மந்தப்பட்ட ஆவணங்களை பற்றி எனக்கு நேரிட்டு தெரியாது, ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 8 மாதம் காலமாக வீரபாண்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சி சான்றாவணம் X2 ஆவணத்தில் கோவை மாவட்ட ஆட்சியரின் ந.க.71962/89/ஆ 2 நாள் 02.05.1990 ன் படி திரு. முருகேசன் பெயரில் பட்டா மாறுதல் செய்ததை ரத்து செய்து தீர்வை ஏற்பட்டு தறிசாக மாற்றம் செய்யப்படுகிறது (Taluk R6 – 8540 அடிக்கப்பட்டு 9730 ஆக திருத்தம் செய்யப்பட்டு /89 நாள் 31.05.1990 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கோவை மாவட்ட ஆட்சியரின் உத்தரவினை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. முனியன் பெயரிலிருந்து முருகேசன் பெயருக்கு பட்டா மாற்றம் செய்யப்பட்டதற்கான உத்தரவினை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை. க.ச.எண்.481/3 பொறுத்து நடைபெற்ற அசல் வழக்கை பற்றி எனக்கு நேரிட்டு எதுவும் தெரியாது. அசல் வழக்கு எண்.193/1996 சம்மந்தப்பட்ட தீர்ப்புரையை நான் பார்த்துள்ளேனா என்றால் இல்லை.